## *அன்பாலும் அறிவாலும் எழுதப்பட்ட 125 ஆண்டுகால வரலாறு*

# தூய மரியன்னை தமிழ்க் கழகம்

பாப்பிறை குருமடம், கண்டி - புனே

சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த பெருமை தென் மதுரைக்கு உண்டு என்றால், கடல் கடந்து ஈழத்து மண்ணிலும், மராட்டிய மண்ணிலும் அன்னைத் தமிழுக்கு அரியாசனம் தந்த பெருமை நம் பாப்பிறை குரு மடத்துத் தமிழ்க் கழகத்திற்கு உண்டு!

***"அன்பிலும் அறிவிலும் வளர்க"*** என்ற உன்னத தாரக மந்திரத்தை உறுதியாய், உவகையுடன் நெஞ்சில் ஏந்தி, காலத்தின் பெருவெளியில் 125 ஆண்டுகளைக் கடந்து, இன்று பெருவிழா காணும் இக்கழகத்தின் வரலாற்றுச் சுவடுகளை அன்னைத் தமிழ்க் கழகத்தின் அன்பான பிள்ளைகளின் முன்னிலையில் பெருமகிழ்வோடு சமர்ப்பிக்கின்றோம்.

ஈழத்து மண்ணின் வரலாற்றுப் புராதன நகரான கண்டி மாநகரில் தமிழ்த்தாயை உயிரென மதித்த சான்றோர்களான **சகோதரர் அடைக்கலம்**, **சகோதரர் சுவாமி நாதர்** ஆகிய பெரியோர்களால் 1901-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ஆம் நாள் குருமடத்தின் ஒரு அங்கமாக இக்கழகம் உருவாக்கப்பட்டது.

தொடக்கத்தில் "**புனித பிரான்சிஸ் சவேரியார் தமிழ்க் கழகம்**" என்ற பெயரோடு தனது முதல் அடியை எடுத்து வைத்த நம் கழகம், அன்னை மரியாவின் மீது கொண்ட ஆழமான, அளவற்ற பக்திப் பெருக்கின் காரணமாக, 1909-ஆம் ஆண்டு மே மாதம் முதல் '**புனித மரியன்னை தமிழ்க் கழகம்**' என்ற புதிய பெயரோடும், பரிமாணத்தோடும் தனது பணிகளை செவ்வனே தொடர ஆரம்பித்தது.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் வழியில், இக்கழகத்தின் இலக்கிய பயணமும், கழகம் ஆற்றிய பணிகளும், காலத்தின் பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை. ஆம், 1910-ஆம் ஆண்டிலேயே நம் கழகம் தன் முதல் நாடகத்தை அரங்கேற்றியது. மாணவர்களின் சிந்தனைத் திறனுக்கும், எழுத்து வன்மைக்கும் வாய்ப்பளிக்கும் வகையில், 1911-ஆம் ஆண்டு "தங்கப்புத்தகம்" என்ற கையெழுத்து இதழ் தொடங்கப்பட்டது.

மிகக் குறைந்த உறுப்பினர்களோடு தொடங்கப்பட்ட இக்கழகம், 1926-**ஆம் ஆண்டு** செப்டம்பர் 3-ஆம் நாள் தனது 25-**ஆவது ஆண்டு வெள்ளி** விழாவைக் கொண்டாடியபோது, அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 32-ஆக உயர்ந்திருந்தது (கழகத்தின் வெள்ளி விழா அழைப்பிதழும், கூட்டத்தின் குறிப்பேடுகளும் நம் பாப்பிறை குருமட அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது). எண்ணிக்கையில் மட்டுமல்லாமல், அளப்பரிய செயல்பாடுகளிலும் பல்வேறு கோணங்களிலும் எழுச்சி பெற்றது.

மாதந்தோறும் இலக்கிய மன்றக் கூட்டங்கள் கூட்டப்பட்டன; புலமை பெற்ற தமிழறிஞர்களும், நாவன்மை மிக்க தமிழ் பேச்சாளர்களும் வரவழைக்கப்பட்டு, சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மேலும் 1935-ஆம் ஆண்டு முதல் 'கதாப்பிரசங்கங்கள்' வாயிலாக ஆன்மீகமும் தமிழும் இணைந்து மக்களுக்குப் புத்துயிர் ஊட்டின. இக்கழகத்தின் பணிகள் குருமடத்தின் நான்கு சுவர்களுக்குள் மட்டும் முடங்கிவிடாமல், வடம் முதல் தென்னகம் வரை, யாழ்ப்பாணம் முதல் கொழும்பு வரை வாழ்ந்த ஈழத் தமிழர்களின் உள்ளங்களைக் கட்டிப்போட்டு மக்களோடு மக்களாக தன்னை ஒன்றிணைத்துக் கொண்டது.

தன் 50 ஆண்டுகாலப் பணியை தமிழீழ மக்கள் மற்றும் சகோதரர்களின் ஆன்மீக, அறிவாற்றல் வளர்ச்சிக்கு பெருந்துணையாய் இருந்து வழிநடத்திய மரியன்னை தமிழ்க் கழகம், காலத்தின் கட்டாயத்தினால் 1955-**ஆம் ஆண்டு** பாப்பிறை குருமடத்தோடு இலங்கையின் கண்டி நகரிலிருந்து, இந்தியாவின் புனே நகருக்கு மாற்றப்பட்டது.

## 75 ஆவது பவள விழா

புனே மண்ணிலே தனது பணிகளை சிறப்பாக தொடர்ந்த நம் கழகம் 1977-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14,15,16 ஆகிய மூன்று நாட்களில் தனது பவள விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

இந்த வைர விழாவிற்கு கழகத்தின் முன்னாள் தலைவரும், அன்றைய கும்பகோணம் மறைமாவட்ட ஆயருமான **மேதகு பால்**

**அருள்சாமி** ஆண்டகை, கழகத்தின் உறுப்பினராக இருந்த ஐதராபாத் பேராயர் **மேதகு சா. அருளப்பா** மற்றும் குருக்களும் பங்கேற்று வாழ்த்தினர். தொடர்ந்து இசை, நடனம் மற்றும் ***'உண்மைகள் உறங்குவதில்லை'*** என்ற நாடகமும், ***மனித சமுதாயத்திற்கு அதிக நன்மை பயப்பது மதமா? விஞ்ஞானமா?*** எனும் தலைப்பில் பட்டிமன்றமும் சிறப்பாக நடந்தேறியன.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வின் முக்கியத்துவத்தை அன்றைய *நம் வாழ்வு இதழும், புனே ஹெரால்ட்* (Now Maharashtra Herald) என்ற ஆங்கில ெய்தித்தாளும் 'தமிழ்க் கழக வைர விழா!' என்ற தலைப்பில் செய்தியாக வெளியிட்டுப் பதிவு செய்துள்ளன. (கழகத்தின் பவள விழா பற்றிய அழைப்பிதழும், குறிப்பேடுகளும் நம் கழக நூலகத்தில் உள்ளன).

## கழக நூற்றாண்டு விழா

தன் பணியைத் தொய்வின்றி தொடர்ந்து, தன்னிடம் வந்த குழந்தைகளை வழிநடத்தி வந்த வரலாற்றுப் பெருமைக்காக இறைவனுக்கு நன்றியாகவும், முன்னோர்களின் அர்ப்பணிப்பை போற்றும் வகையிலும், எதிர்காலத் தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும் நினைவாகவும், 2000-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27, 28 மற்றும் 29 ஆகிய மூன்று நாட்களில் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவின் சிறப்பை மேலும் மெருகூட்டும் வகையில், அன்றைய சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு எட்வர்ட் பிரான்சிஸ் ஆண்டகை அவர்கள் விழாவில் கலந்து கொண்டு தலைமை ஏற்று வழிநடத்தினார், மதுரை இயேசு சபை மறைமாநிலத் தலைவராகப் பணியாற்றிய அருட்தந்தை பிரான்சிஸ் சேவியர் அவர்களும், கழகத்தின் முன்னாள் உறுப்பினர்களாக இருந்து, பின்னாளில் அருள்பணியாளர்களாக உயர்ந்த 24 குருக்களும் மற்றும் கழக சகோதரர்களும் இவ்விழாவில் பங்கேற்று, தங்களின் வருகையால் விழாவிற்குப் பெருமை சேர்த்தனர்.

1978 முதல் 1982 வரை இக்கழகத்தின் உறுப்பினராக இருந்து, அதன் வளர்ச்சிப் பயணத்தில் தன்னையும் இணைத்துக்கொண்ட முன்னாள் சென்னை மயிலை உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக இருந்த ஆயர் மேதகு லாரன்ஸ் பயஸ் துரைராஜ் ஆண்டகை, அவர்கள் இவ்விழாவின் மகிழ்வில் நேரடியாகப் பங்கேற்க இயலாத நிலையிலும், இக்கழகத்தின் மீது கொண்டிருந்த அளவற்ற அன்பையும், பற்றையும், தனது வாழ்த்துச் செய்தியையும் அன்புக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு, நூற்றாண்டு விழா நம் கழகத்தின் வரலாற்றில் ஒரு பொன்னான அத்தியாயமாகப் பதிந்தது.

***"யாதும் ஊரே யாவரும் கேளிர்"*** என்ற புறநானூற்றுப் பெருமொழிக்கு இலக்கணமாக, மண்ணும் மனிதர்களும் மாறினாலும், மொழியால் நாம் அனைவரும் ஒன்றே என்பதை உணர்த்தி, புனே நகரில் புதிய விழுதுகளைப் பரப்பி தனது உன்னதப் பணிகளைத் தொய்வின்றித் தொடர்ந்து, இன்று 125-ஆவது ஆண்டில் கம்பீரமாக நிறைவு செய்கிறது நம் மரியன்னை தமிழ்க் கழகம்.

கண்டி மாநகரில் விதைக்கப்பட்ட அந்தத் தமிழ்ப் பயிர், இன்று மராட்டிய மண்ணிலே வேரூன்றி, விழுதுகள் பரப்பி, பாப்பிறை குருமடத்தின் பாசமிகு குழந்தைகளுக்கும், மராட்டிய மண்ணில் வாழும் பண்பான தன் மக்களுக்கும், தொலைநோக்குப் பார்வையோடு உருவாக்கப்பட்ட கழகத்தின் கட்டளைகளையும், நோக்கத்தையும் கருத்தில் கொண்டு ஆற்றிவரும் கழகத்தின் செயல்பாடுகளும் அர்ப்பணிப்புகளும் ஏராளம்.

1. மாதத்தின் இரண்டாம் வெள்ளிக்கிழமைகளில், கழக திருப்பலி மூலம் குரு மாணவர்களின் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தி வருகிறது.
2. குரு மாணவர்களின் சிந்தனைக் கருவூலமாக, அவர்களின் ஆக்கப்பூர்வமான எழுத்துத் திறமைக்கு வடிகாலாக **"நிலா"** என்ற இலக்கிய இதழ் தொடர்ந்து ஒளிர்ந்து வருகிறது. இந்த நிலா இலக்கிய இதழ் தமிழ் கழகத்திற்கும் தன் பாசமிகு குழந்தைகளின் வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகளை நிலாவின்

நீங்காத நினைவுகள் என்று ஆழமாக விரிவாக குறிப்பிடும் வகையில் உள்ளது.

## நிலாவின் நீங்காத நினைவுகள்

நிலா என்றதும் பலரின் நினைவுக்கு வருவது வானில் ஒளிரும் நிலவு அல்லது அழகை வருணிக்க பயன்படுத்தும் வருணனை என்று தான். ஆனால் கழக உறுப்பினர்களான நமக்கு ***நிலா*** தந்த நிலையான நினைவுகள் ஏராளம் ஏராளம். இத்தகைய சீர்மிகு சிந்தனைகளையும் சிறப்பான நினைவுகளையும் கொண்டிருக்கும் நம் நிலா, கழகத்தின் வளர்ச்சிக்கும், குரு மாணவர்களின் சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கும், ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை.

ஆம், 1911-ஆம் ஆண்டு முதல் "***தங்கப்புத்தகம்***" என்ற பெயருடன், தமிழ் கழக மாணவர்களின் சிந்தனைத் திறனுக்கும், எழுத்து வன்மைக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் பொருட்டு, தொடங்கப்பட்ட கையெழுத்து இதழ் தான் இன்று நாம் அகவொளியும் அறிவொளியும் பெற்று அறிவார்ந்த மாந்தராய் வாழ ஆவணம் செய்து கொண்டிருக்கும் நம் **நிலா இதழ்**.

1950-ஆம் ஆண்டு முதல் இன்று வரை உள்ள நிலா படைப்புகளே, நம் கைவசம் இருந்தாலும், இதன் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டிப் பார்க்கும்போது, வெறும் எழுத்துக்களை மட்டுமல்ல, ஒரு தலைமுறையின் வாழ்வியலையும், அவர்களின் அறிவுத் தேடல்களையும், இளமைத் துடிப்பையும் நம்மால் கட்டாயமாக அனுபவிக்க முடியும்.

சில பக்கங்கள் ஆழமான ஆன்மீகச் சிந்தனைகளால் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன; சில படைப்புகள் வாழ்க்கையின் எதார்த்தங்களை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன; இன்னும் சில படைப்புகள், குரு மடத்தை பற்றியும், குருமட செயல்பாடுகளைப் பற்றியும், கழகத்தைப் மற்றும் அதன் செயல்பாடுகளைப் பற்றியும் பல

குறும்பான விமர்சனங்களாலும், நகைச்சுவைகளாலும் நம்மை வியப்பில் ஆழ்த்த கூடியதாகவே இருக்கின்றன.

குறிப்பாக, அன்றைய சகோதரர்கள் தங்களுடைய ஆன்மீக அனுபவங்களையும், இறையியல் சிந்தனைகளையும், வாழ்க்கைப் பார்வைகளையும், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், சிந்தனைப் பதிவுகள், கலைப்படைப்புகளையும் ஆண்டுதோறும், கிறிஸ்து பிறப்பு விழா, பொங்கல் விழா, போன்ற பல்வேறு தருணங்களில் வெளிவந்த நிலா இதழில் பதிவு செய்திருக்கிறார்கள். இவ்வாறு பன்முகத் திறமைகளின் சங்கமமாக ஒவ்வொரு இதழும் தனக்கென ஒரு தனித்துவத்தைப் பதித்திருக்கின்றது.

நிலாவின் பக்கங்களில் இன்றும் எங்களோடு பயணித்து வரும் பல தலைமுறையினர்களின் பாதச் சுவடுகளை பின்பற்றி இன்றும் தமிழ்த்தாயின் பிள்ளைகள் தங்களின் அறிவாற்றலுக்கும் சிந்தனைக்கும் நிலா இதழின் மூலம் உயிரூட்டம் அளித்து வருகிறார்கள். மேலும்.....

3. தமிழ்க் கலையையும் பண்பாட்டையும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு சேர்ப்பதில் நம் தமிழ்க் கழகம் தனித்துவமான பங்களிப்பை ஆற்றி வருகின்றது. குறிப்பாக, 90-களுக்கு முன்புவரை நம் தமிழ்க் கழகத்தின் சார்பாக ஆண்டுதோறும் பொங்கல் விழாவும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கலை நிகழ்ச்சிகளும், நாடகமும் அரங்கேற்றப்பட்டன. இவ்வாறு, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் ஆண்டுகளில், பொங்கல் விழாவும் இணைந்து கொண்டாடப்பட்டதால், அந்த ஆண்டுகளில் கழகம் இரண்டு சிறப்பான நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வழங்கி வந்தது.

காலச்சூழலுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப, பின்னாளில் இக்கலைநிகழ்ச்சிகள் மற்றும் நாடக அரங்கேற்றங்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் வகையில் மாற்றியமைக்கப்பட்டன. இன்றும் இந்நிகழ்ச்சிகள் சகோதரர்களின் கலைத்திறன், படைப்பாற்றல் மற்றும் ஆளுமையை ஊக்குவித்து

வளர்க்கும் சிறந்த களமாகத் திகழ்கின்றன. அந்த வகையில், கடந்த 2024 - 2025 -ஆம் கல்வி ஆண்டில் “அறம்” என்ற உயரிய கருப்பொருளை மையமாகக் கொண்டு கழகம் தனது கலைநிகழ்ச்சிகளைச் சிறப்புற வழங்கியது. வருகின்ற கல்வி ஆண்டிலும், தமிழின் பெருமையும் பாரம்பரியத்தையும் பறைசாற்றும் வகையில் கலை நிகழ்ச்சிகளையும், நாடகத்தையும் அரங்கேற்றம் செய்ய ஆவலாய் உள்ளது.

4. கோடைகால மற்றும் உயிர்ப்பு பெருவிழாக் காலங்களில் மறைப்பணிக்குச் செல்லும் சகோதரர்களுக்குப் பெருந்துணையாக இருக்கும் வகையில், 90-களில் இறையியல் சகோதரர்கள் ஒன்றுகூடி சிலுவைப்பாதைச் சிந்தனைகளையும், தியானங்களையும் தயாரித்து வழங்கி வந்தனர். அதேபோன்று, புனித வார வழிபாடுகளைச் சிறப்பாகவும், பக்தி உணர்வுடனும் முன்னெடுத்துச் செல்லும் வகையில், வழிபாட்டுப் பாடல்களுக்கான சிறப்புப் பயிற்சிகளையும் கழகம் ஒருங்கிணைத்து வருகின்றது. இவ்வாறு, சகோதரர்களின் ஆன்மீகத் தயாரிப்பிற்கும் மறைப்பணித் திறன் வளர்ச்சிக்கும் நம் தமிழ்க் கழகம் சிறந்த பங்களிப்பை ஆற்றி வருகின்றது.

5. தமிழைக் தாய்மொழியாகக் கொண்ட குரு மாணவர்கள் தங்களை எதிர்காலத் தமிழ்க் குருத்துவப் பணிக்குத் தகுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் மேடைப்பேச்சு மற்றும் மறையுரை பயிற்சிகளும் கழகத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றன. ஆண்டுதோறும் இலக்கிய அமர்வு கூட்டங்களும் சிறப்பாக ஒருங்கிணைக்கப்படுகின்றன.

6. சிறு விதையாய் நடப்பட்டு பல இடர்கள் மற்றும் இன்னல்களைக் கடந்து இன்று வரை மிகவும் துடிப்பாய் பணியாற்றி வரும் நம் கழகத்தை கடந்த ஆண்டுகளில் தன் இடைவிடாத பரிந்துரையால், கண்ணின்மணி என காத்து வரும் நம் அன்னை மரியாவுக்கு நன்றி கூறும் வகையில், ஆண்டுதோறும் அவர் பிறந்த நாளாம் செப்டம்பர் 8-ஆம் நாளில்

கழகத்தின் திருவிழாவை, நம் கழகம் சீரும் சிறப்புமாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

7. தமிழர்களின் திருநாளாம் தைத்திருநாளில் தமிழரின் மரபையும், கலாச்சாரத்தையும் மறக்காமல் நினைவு கூறும் வகையிலும் வருடம் தோறும் பொங்கல் விழா தமிழரின் பண்பாட்டுக் கலைகளை நினைவு கூறும் வகையிலும் நடனம், சிறிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் 19 வகையான பாரம்பரிய உணவுடனும், அன்னைத் தமிழின் அறுவடைத் திருநாளான பொங்கல் தமிழரின் கலாச்சாரத்தை போற்றும் வகையில் குரு மடத்தில் வருடம் தோறும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

8. மதுரைக்கு நிகராய் மராட்டிய மண்ணில் மகுடம் சூடிய தமிழ்க் கழகம் தன்னை குரு மடத்தின் நான்கு சுவருக்குள் சுருக்கி கொள்ளாமல்,

| | |
|---|---|
| ராம்வாடி, | கட்கி |
| ஷான்வாடி | சோலாப்பூர் பஜார் |
| கோர்புரி, | ஷைனிக்வாடி, |
| தெகுரோடு | சின்சுவாடு |
| தாராவி | வானாவோரி. |

என பத்துக்கும் மேற்பட்ட பங்குகளில், நம் மரியன்னை தமிழ் கழகத்தின் பாசமிகு குழந்தைகள் ஞாயிறு திருவழிபாடுகளில் இறைவார்த்தை போதித்தும், ஞாயிற்றுக்கிழமை, கிறிஸ்து பிறப்பு காலம், தவக்காலம், மற்றும் இதர பங்கு திருவிழாக்களின் திருவழிபாட்டிற்கான பாடல் பயிற்சிகளை ஒருங்கிணைத்தும், வருடம் தோறும் மராட்டிய மண்ணில் வாழும் தமிழ் நெஞ்சங்களை ஒன்றிணைக்கும் வகையில் பங்குகளில் தமிழர் திருநாளாம் தைத்திருநாள் கொண்டாட்டத்தை முன் நின்று சிறப்பாக வழி நடத்தியும், மேலும் திரு இருதய ஆண்டவருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட மாதமான ஜூன் மாதங்களிலும், ஜெபமாலை அன்னை கற்பனைக்கப்பட்ட மாதம் ஆன செப்டம்பர் மாதங்களிலும், குடும்பங்களை சந்தித்து அவர்களோடு ஜெபித்து அவர்களின் ஆன்மீக

வாழ்விற்கு வலு சேர்த்து, திரு இருதய ஆண்டவரின் அருளை பெற்றுத் தரும் கருவிகளாகவும் திகழ்கின்றார்கள்.

பல்வேறு ஆகச்சிறந்த ஆளுமைகளை உலகிற்கு அறிமுகப்படுத்திய இக்கழகத்தின் கலங்கரை விளக்கங்களான அனைவரது பெயர்களை குறிப்பிடுவது இயலாத ஒன்றாக இருந்தாலும், உலகளாவிய கத்தோலிக்கத் திருச்சபையை வழிநடத்திய உன்னதச் சான்றோர்களை, மாபெரும் ஆளுமைகளை ஈன்றெடுத்த ஒர் அதிசய தொட்டில் நம் புனே பாப்பிறை குருமடத்துத் தமிழ்க் கழகம்!

- ஆம், 1931-ஆம் ஆண்டு இக்கழகம் தந்த, **பாப்பிரை குரு மடத்தின் முதல் தமிழ் ஆயராக** முன்னாள் கும்பகோணம் மறைமாவட்ட ஆயர் **மேதகு பீட்டர் பிரான்சிஸ்** அவர்களின் பாதச்சுவடுகளைப் பின்பற்றி எத்தனையோ மாமணிகள் உருவாகியுள்ளனர்.
- திரிகோணமலை-மட்டகளப்பு மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் **மேதகு இக்னேசியஸ்** (1947),
- கோவை மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் **மேதகு சவரிமுத்து** (1950),
- பாண்டிச்சேரி கடலூர் உயர்மறை மாவட்டத்தின் முன்னாள் பேராயர் **மேதகு இராயப்பன் அந்தோணிமுத்து** (1965),
- கும்பகோணம் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் **மேதகு பால் அருள்சாமி** (1955),
- தூத்துக்குடி மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் **மேதகு அமலநாதர்** (1981),
- ஈழத்து மண்ணில் திருச்சபையை வழிநடத்திய யாழ்ப்பாணத்தின் ஆயர்களான **மேதகு அந்தோணிமுத்து, மேதகு தியோகுப்பிள்ளை, மேதகு சவரிராயன், மேதகு தாமஸ் சவுந்தரநாயகம், மேதகு ஜஸ்டின் பெர்னார்ட் ஞானப்பிரகாசம்.**
- சென்னை மயிலை உயர் மறை மாவட்டத்தின் முன்னாள் துணை ஆயரும் இந்நாள் தர்மபுரி மறை மாவட்டத்தின் ஆயருமான **மேதகு லாரன்ஸ் பயஸ் துரைராஜ்**,

என பல பேராயர்களையும், ஆயர்களையும் இந்தத் தமிழ்க் கழகம் திருச்சபைக்குக் கொடையாகத் தந்து, காலத்தால் அழியாத பெருமையைத் தேடிக்கொண்டது! இன்றும் இத்தகு மேன்மைகளோடு, பல ஆளுமைகளை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றது.

## 125 ஆவது முத்துப் பெரு விழா சிறப்பு செயல்பாடுகள்

125 ஆண்டுகள் என்பது வெறும் காலத்தின் கணக்கல்ல
அது தலைமுறைகள் சுமந்த தமிழ்ப்பற்று!
முன்னோர்கள் விதைத்த கனவு!
பலரின் அர்ப்பணிப்பால் வளர்ந்த !
இன்றைய தலைமுறையால் கொண்டாடப்படும் பெருமை
நாளைய தலைமுறையிடம் ஒப்படைக்கப்படும் ஓர் உன்னதமான பொறுப்பு!

இத்தகைய வரலாற்றுப் பெருமையோடு 125-ஆம் ஆண்டு பெருவிழாவை தூய மரியன்னை தமிழ்க் கழகம், கல்வி ஆண்டி 2026 - 2027 ல் நன்றியுணர்வோடும், புத்துணர்வோடும், பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளோடும் கொண்டாடி வருகின்றது.

- **முதலாவதாக**, கழகத்தின் பாதுகாவலியும் வழிகாட்டியுமான அன்னை மரியாவின் பிறந்த நாளான செப்டம்பர் 8-ஆம் நாள், “Mary Makes Humanity Human” என்ற ஆழமான கருப்பொருளை மையமாகக் கொண்டு, இதுவரை கழகத்தைத் தாயன்போடு காத்து வழிநடத்திய அன்னை மரியாவுக்கும், இறைவனுக்கும் நன்றி செலுத்தும் வகையில், ஒட்டுமொத்த குருமடக் குடும்பமாக ஒன்றிணைந்து சிறப்புத் திருப்பலியை நிறைவேற்றி, கழகத் திருவிழாவை மகிழ்வோடு கொண்டாடியது.
- **இரண்டாவதாக**, மராட்டிய மண்ணில் வாழும் தமிழ் உறவுகளை செப்டம்பர் மாதம் 20ஆம் நாள் (2026) ஒன்றிணைத்து, அவர்களுக்கென ஒரு சிறப்பான தமிழர் கூடுகையை ஏற்பாடு செய்து, கலைநிகழ்ச்சிகளையும், குழு விளையாட்டுகளையும்

ஒருங்கிணைத்து, கழகத்தின் 125 ஆண்டு விழா மகிழ்ச்சியில் அவர்களையும் பங்கேற்கச் செய்தது.

- **மூன்றாவதாக**, இக்கழகத்தின் வளர்ச்சிக்காகவும், பெருமைக்காகவும் பல்வேறு காலகட்டங்களில் உழைத்த முன்னாள் கழக உறுப்பினர்களை மீண்டும் ஒருங்கிணைத்து, அவர்களின் அர்ப்பணிப்புகளை நினைவுகூரும் வகையில் குருக்கள் கூடுகை சிறப்பாக இந்த அழகான தருணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது (நவம்பர் 25, 2026).

இந்த மகிழ்வான வரலாற்றுத் தருணத்தை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் கழகத்திற்கெனத் தனித்துவமான இணையதளம் ஒன்றும் உருவாக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது. அதோடு, இசையால் மெருகூட்டப்பட்ட கழகத்தின் கழகப் பண் வெளியிடப்பட்டு, கழகத்தின் அடையாளத்தையும் ஒற்றுமையையும் புதிய பரிமாணத்தில் வெளிப்படுத்துகின்றது.

- **நான்காவதாக**, தமிழர்களின் பண்பாட்டுப் பெருமையைப் பறைசாற்றும் தைத்திருநாளாம் பொங்கல் விழாவன்று (2027), 125-ஆம் ஆண்டு முத்துப் பெருவிழாவை நிறைவு செய்து, தமிழர் மரபையும் கழகத்தின் வரலாற்றுப் பெருமையையும் ஒருங்கிணைக்கும் வகையில் சிறப்பு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட உள்ளன. குறிப்பாக, கழகத்தின் பெருமையை இசையிலும், நடனத்திலும் வெளிப்படுத்தும் புதிய நடனப் பாடல் ஒன்றையும், குரு மாணவர்களின் சிந்தனைத் திறன், எழுத்தாற்றல், படைப்பாற்றல் ஆகியவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் “நிலா படைப்புகள்” என்ற சிறப்புத் தொகுப்பு நூலையும் வெளியிட ஆவலுடன் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்தகால பெருமையை நினைவுகூர்ந்து, நிகழ்கால ஒற்றுமையைக் கொண்டாடி, எதிர்காலத் தலைமுறைக்கான புதிய படைப்புகளை உருவாக்கும் வகையில் நம் கழகத்தின் 125-ஆம் ஆண்டு பெருவிழா நன்றியுணர்வும் புதுமையும் நிறைந்த வரலாற்றுப் பயணமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

***"தோன்றின் புகழோடு தோன்றுக"*** என்ற வள்ளுவனின் வார்த்தைக்கு ஏற்ப கடந்த ஆண்டுகளில், காலத்தின் பெருவெளியில், அன்பையும் அறிவையும் விருதுவாக்காக கொண்டு அஞ்சா நெஞ்சத்தோடும், முன்னோர்களின் வியர்வைத் துளிகளாலும், பல வழிகாட்டி தந்தையர்களின் அர்ப்பணிப்பாலும், நம் தமிழ் நெஞ்சங்களின் உதிரத்தாலும், அன்னை மரியாவின் அளப்பரிய ஆசியாலும், எழுதப்பட்ட ஒர் உன்னத காவியத்தில் இடம் பெற்றுள்ள நாம், 125 ஆண்டுகளை நிறைவு செய்யும் தூய மரியன்னை தமிழ் கழகத்தோடு இணைந்து கடவுளுக்கு நன்றி கூறுவோம் , தரணியெங்கும் தமிழ் கூறும் நல்லுலகை படைப்போம்.

**வாழ்க தமிழ்!**
**வளர்க தமிழ்க் கழகம்!**

## *2026 - 2027 ஆண்டின் கழக உறுப்பினர்கள்*

| கழக உறுப்பினர் பெயர் | நிலை | மறைமாவட்டம் |
|---|---|---|
| சகோ. அருள் சகாயராஜ் லூ | மூன்றாம் ஆண்டு இறையியல் | திருச்சிராப்பள்ளி |
| சகோ. கிறிஸ்டஸ் அமல தீபன் | " | தூத்துக்குடி |
| சகோ. சேம் பிரிம்மர் | " | குழித்துறை |
| சகோ. லூர்து அபித் | " | பாளையங்கோட்டை |
| சகோ. நிர்மல் சாவியோ பால் | இரண்டாம் ஆண்டு இறையியல் | கோட்டாறு |
| சகோ. மோட்ச பெர்தினாந்து மி | " | பாளையங்கோட்டை |
| சகோ. ஜோசப் வினித் சி | " | கோட்டாறு |
| சகோ. ஸ்நோவின் | " | தூத்துக்குடி |

| | | |
|---|---|---|
| சகோ. அலெக்ஸ் | முதலாம் ஆண்டு இறையியல் | தஞ்சாவூர் |
| சகோ. ஆன்ட்றோ வசந்த் | " | குழித்துறை |
| சகோ. ஜார்ஜ் | " | தஞ்சாவூர் |
| சகோ. ஜோஸ்வர் கிப்ஸ்டன் | " | கோட்டாறு |
| சகோ. சூரியா. மி | " | பாளையங்கோட்டை |
| சகோ. டென்னிஸ் டோ. | மூன்றாம் ஆண்டு மெய்யியல் | தூத்துக்குடி |
| சகோ. லியோ ஆனந்த ராஜ் சே. | " | திருச்சிராப்பள்ளி |
| சகோ. அந்தோணி எடிசன் | இரண்டாம் ஆண்டு மெய்யியல் | தூத்துக்குடி |
| சகோ. ஆட்ரின் | " | பாளையங்கோட்டை |
| சகோ. ஜெரின் | " | கோட்டாறு |
| சகோ. ரோசன் | " | குழித்துறை |

| | |
|---|---|
| பேரா. முனைவர். சூ. ஸ்டீபன் ஜெயார்டு.<br>**கழக வழிகாட்டி தந்தை.** | பேரா. முனைவர். நிஷாந்த் அல்போன்ஸ்<br>**கழக சிறப்பு உறுப்பினர் தந்தை** |
| சகோ. கிறிஸ்டஸ் அமல தீபன்<br>**கழக தலைவர்** | சகோ. டென்னிஸ்<br>**கழக செயலர்** |

**ஆகப்பெரும் காவியத்தில் ஒருவன்**

சகோ. லியோ ஆனந்த ராஜ். சே.
*கழக வரலாற்று குறிப்புகளின் தொகுப்பாளர்.*
**25.11.2026**

நன்றி.